# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)" முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8129311

1. District மாவட்டம் : Tirunelveli — PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption — Year: ஆண்டு 2024 — FIR No.: மு.த.அ. எண் 08/2024 — Date: நாள் 27.09.2024

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 — Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 26.09.2024 — Time to : நேரம் வரை 15.00
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.09.2024 — Time : நேரம் 08.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.09.2024 — Time : நேரம் 08.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Taluk Office, Radhapuram, Tirunelveli District. 65 Km South.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.S.Sivabalan — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Sundar Raj
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25.07.1988 — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Student — (g) Address : முகவரி Door No.3, Sri Ramapuram, Anna Nagar Road, Panagudi, Radhapuram Taluk, Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Ajith, Assistant, Radhapuram Taluk office, Tirunelveli District

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Not arise

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 27.09.2024-ம் தேதி காலை 08.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ராபின் ஞானசிங் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சு.சிவபாலன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா, இராதாபுரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.அஜீத் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவின்படி ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து, அவர்களின் அனுமதி பெற்று 27.09.2024-ம் தேதி 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2024 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 என வழக்கு பதிவு செய்தேன்.

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 27/09/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 27/9/24

15. Date & Time of despatch to the court: 27/09/2024 at 09.30 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. ROBIN GNANASINGH
Rank: நிலை Inspector of Police No. எண்
V&AC, Tirunelveli.

**Continuation of Tirunelveli Vigilance and Anti-Corruption Crime No.08/2024:-**

மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் சு.சிவபாலன், த/பெ.சுந்தர்ராஜ், கதவு எண்.3, ஸ்ரீராமபுரம், அண்ணாநகர் ரோடு, பணகுடி, இராதாபுரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருநெல்வேலி மாவட்டம். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் செங்கல்பட்டு சட்டக்கல்லூரியில் படித்து வருகிறேன். எனது அம்மா வழி தாத்தாவான தளவாய்புரத்தை சேர்ந்த திரு.மணி நாடார் என்பவர் 09.07.2009-ம் தேதி காலமாகிவிட்டார். மேற்படி எனது தாத்தா காலமான வகைக்கு ஏற்கெனவே இராதாபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வாரிசு சான்று பெறப்பட்டுள்ளது. எனது தாத்தா திரு.மணி நாடாரின் வாரிசு சான்றின் நகல் எனக்கு வேண்டி இருப்பதால் இராதாபுரம் தாலுகா அலுவலகத்திற்கு 21.08.2024-ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் நேரில் சென்று, மேற்படி அலுவலகத்தில் விசாரித்து அங்கிருந்த உதவியாளர் திரு.அஜித் என்பவரிடம் எனது தாத்தாவின் இறப்பு சான்று மற்றும் எனது ஆதார் அட்டை நகல் ஆகியவற்றையும் இணைத்து வாரிசு சான்று நகல் வேண்டி மனு கொடுத்தேன். பின்னர் இது தொடர்பாக நான், நேற்று 26.09.2024ம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கிருந்த உதவியாளர் திரு.அஜித் என்பவரை சந்தித்து அவரிடம் எனது தாத்தாவின் வாரிசு சான்று நகல் பற்றி கேட்டபோது, அவர் என்னிடம், வாரிசு சான்று நகல் ஏற்பாடு செய்து தருவதற்கு தனக்கு ரூ.1,000/-மும், மற்றொரு அதிகாரிக்கு ரூ.3,000/- மும் ஆக மொத்தம் ரூ.4,000/- லஞ்சமாக பணம் தர வேண்டும் என்று என்னிடம் சொன்னார். நான் அவரிடம் தற்போது என்னிடம் கையில் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் கண்டிப்பாக நாளை அதாவது இன்று 27.09.2024 பணத்துடன் வந்து தன்னிடம் பணத்தை தந்தால் ஏற்பாடு செய்யமுடியும் என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்த போது அரசு வேலையை செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கிறாரே என்று என் மனம் சங்கடப்பட்டது. எனக்கு லஞ்சமாக மேற்படி திரு.அஜித் அவர்களுக்கு பணம் கொடுத்து வாரிசு சான்று நகல் பெற விருப்பமில்லை. மேற்படி அலுவலர் லஞ்சமாக கேட்ட மொத்த பணம் ரூ.4,000/- நான் வைத்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்கும் இராதாபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.அஜித் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd. (சிவபாலன்) 27/09/2024.

Sir, Received this complaint today on 27.09.2024 at 08.30 hrs and conducted confidential enquiry and found prima facie, hence informed the matter to the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai, obtained permission and I registered a case in Tirunelveli V&AC Cr.No.08/2024 u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 today on 27.9.2024 at 09:00 hrs. sd. D.Robin Gnanasingh, 27.09.2024. Inspr., of Police, V&AC, TIN.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

27/9/24

D. Robin Gnanasingh
Inspr. of Police
V&AC, TIN.